# Church of the Assumption, PJ

அப்போஸ்லிக்க கார்மல்   (AC) தவக்காலப் பிரச்சாரம் 4வது வாரம்

ஆண்டவரும் மற்றும் அவர் பணியும் ...ஏதாவது கேள்விகள் உள்ளனவா ?

கடவுள் மற்றும் மனித வாழ்க்கை பற்றிய உண்மைகள் புரிந்துக் கொள்வ தற்க்கு ஆர்வம் உண்டா?

உண்மை வழி நாடுவது  கிறிஸ்துவின் நம்பிக்கையே.

கிறிஸ்துவ  வழி , உண்மை மற்றும் வாழ்க்கை  கிறிஸ்வின் நம்பிக்கையே.

ஆண்டவரின்  பார்வையில் சவால்களைக் காண்பதும் கிறிஸ்துவின் நம்பிக்கையே.

கிறிஸ்த்துவின் சகோதர சகோதிரிகளே உங்களுக்கு சமாதானம். தவக்காலம் 4வது வார பிரச்சாரத்திற்கு அன்புடன் வரவேற்கிறேன். எங்கு நீங்கள் இருந்தாலும் அனைவரும் நலமாகவும் பாதுகாப்பாகவும் இருக்க நாம் ஆண்டவரிம் மன்றாடுவோமாக!

யோவான் 3: 14- 21 பத்தியிலிருந்து காண்போம். ஆண்டவர் அவர் பணியும் ஒட்டி  பல போராட்டங்களுடன் கேள்விகளோடு பரிசேயர் நிகோடமஸ் இரவில் சென்று சந்திக்கிறார்.

வாருங்கள் வாசிப்போம்.

பாலைவனத்தில் மொசேயால் பாம்பு உயர்த்தப்பட்டது  போல பானிட மகனும் உயர்த்தப்பட  வேண்டும்..அப்போது அவரிடம் நம்பிக்கைக் கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறுவர். தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறுவர். தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு  கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார். உலகிற்குத் தண்டனை  தீர்ப்பளிக்க அல்ல. தம் மகன் வழியாக அதை  மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார். அவர் மீது நம்பிக்கை கொள்ளவோர்  தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவதில்லை;  ஆனால் நம்பிக்கை கொள்ளாதோர்.  ஏற்கனவே தீர்ப்பு பெற்று விட்டனர். ஏனெனில் அவர்கள் கடவிளின்  ஒரே மகனிடம் நம்பிக்கை கொள்ளவில்லை. ஒளி உலகிற்கு வந்திருந்தும் தம் செயல்கள் தீயனவாய் இருந்தால் மனிதர் ஒளியை  விட இருளையே விரும்பினர். இதில்தான்  அவர்களுக்கு எதிரான தண்டனைத் தீர்ப்பு அடைங்கியுள்ளது. தீங்கு செய்யும் அனைவரும் ஒளியை வெறுக்கின்றனர். தங்கள் தீச்செயல்கள் வெளியாகிவிடும் என அஞ்சி அவரகள் ஒளியிடம் வருவதில்லை. உண்மைக்கேற்ப வாழ்பவர்கள் ஒளியிடம்

வருகிறார்கள். இதனால் அவர்கள் செய்யும் அனைத்தையும் கடவுளோடு இணைத்தே செய்கிறார்கள் என்பது வெளியாகும்.

குறிப்பு 1 நம்பிக்கையைத் தொட்டு என்னுடைய கேள்விகள் என்ன ?

அனுபவங்கள் குழப்பான சூழ்நிலையில் இருந்தாலும் நாம் கிறிஸ்துவின் நம்பிக்கை எனும் பாதையில் பயணிக்கிறோம்...சிலசமயங்களில் நம்பிக்கையின்மை உருவாகலாம். ஆண்டவரும் மற்றும் அவர் பணியும் நற்செய்தியின் வழி மெய்யாக நம்பிக்கையின் தன்மையை கற்பிக்கப்படுகிறது. கேள்விகள் மனதில் தோன்றினாலும் நம்பிக்கை இல்லை என அர்த்தமாகாது. நம்பிக்கை மேலோங்கி வளர ஆண்டவர் அழைக்கின்றார். ஆண்டவர் கேள்விகளோடும் குழப்பங்களோடும் இருக்கும் வேளையில் அழைக்கிறார்.

கேள்விகளோடு அங்கே நின்றிடாமல் . இயேசுவை நிகோடமஸ் நாடியது போல் பதில்களை ஆர்வத்துடன் தேடுங்கள்.

கேள்விகள்

ஆண்டவரின் நம்பிக்கை ஒட்டி என்னுடைய கேள்விகள் என்ன?

எத்தனை முறை இயேசுவிடம் கேள்வி கேட்டுபின் ஆண்டவர் என்னோடு உரையாடவும் வழிகாட்டவும் அனுகிருக்கிறேனா?

குறிப்பு 2

எவ்வாறு நம்பிக்கையின் அடையாளங்கள் சின்னங்கள் எனக்கு வழிகாட்டலாக உள்ளது?

மோசஸ் காலத்தில், ஆண்டவரின் அடையாளம் யூதர்களின் வழி அறிவிக்கப்பட்டதின் வழி நிகோமசின் கேள்விகளுக்கு பதிலுரைக்கிறது. யெகோவா எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டிய காலமது. அவர்கள் பாலைவனத்திலிருந்து வாக்களிக்கப்பட்ட நிலத்தை நோக்கி பயணம் செய்து கொண்டிருந்தனர். அவ்வமயம் பாம்புகளால் தாக்கப்பட்ட உயிர் இழந்தனர். யெகோவாவிடம் உதவிக்கு மன்றாடினர்.

வெண்கல பாம்பு சிலை செய்து எல்லாரும் பார்க்கும்படி உயர்ந்த இடத்தில் நிறுவும் படி யெகோவா மோசேயைப் பணித்தார். பாம்பினால் தீண்டபட்டவர்கள் அதைப் பார்த்தால் குணமடையவர். இதனால் வெண்கல பாம்பு சிலை அடையாளச் சின்னமாக விளங்கியது. உயிரைக்காக்கும் குணமளிக்கும் சின்னமாக அமைந்தது. யூதர்களின் சரித்திரத்தில் நிகோமசுக்கு மறக்கவியலாத நிகழ்வாக அமைந்தது. அவ்வாறு நிகோடமசுக்கு ஆண்டவர் உதவும் மனப்பான்மையை உணர இயேசு உணர்த்துகிறார்.

கேள்விகள்

நம்பிக்கை எனும் பயணத்தில் ஆண்டவர் என்ன அடையாளங்கள் மற்றும் சின்னங்கள் கொடுத்திருக்கிறார்?

இன்று நான் குழப்பத்தில் இருக்கும் போது , ஆண்டவரின் நம்பிக்கை எந்த சின்னங்கள் அடையாளங்கள் கொண்டு வழிகாட்டலாக அமைகிறது?

குறிப்பு 3

ஆண்டவரின் பார்வையின் வழியே எல்லாவற்றையும் பார்க்கிறேனா?

சிலுவையில் தொங்கிய இயேசுவை கூர்ந்து கவனித்தால் நிகோமஸ் கேள்விகளுக்கு பதில் கிடைக்கும் என இயேசு சொல்கிறார். இயேசு சிலுவையில் உயரே இருக்கும் இடம் முக்கியமானதாகும். மலையுச்சி மீது இருந்து உலகைக் காணும் காட்சிக்கு ஒப்பாகும். மலையின் அடியில் காணும் காட்சி போல் அல்ல....வித்தியாசமானதாகும். மேலே இருந்து காணும் காட்சி மிகப்பெரியதாகும். ஒதுக்கப்பட்டோர் துன்ப படுவோர் உள்ள இடங்களைக் காணவும் தொடர்பு கொள்ளவும் ஏதுவாகிறது.

இவ்வுலகை உயர்ந்த அளவில் காண இயேசு நிகோடமசை அழைக்கிறார். இயேசு தன் கண்களால் காணும் உலகைப் பார்க்க நிகோடமசையும் அழைக்கிறார். நம்பிக்கையுடன் நாம் காணும் இவ்வுலகத்தை , நம்முடைய பார்வை மனமாற்றமடைச் செய்கிறது கிறிஸ்துவ நம்பிக்கை.

கேள்விகள்

கிறிஸ்துவ நம்பிக்கை என்பதை என் வாழ்வில் நான் எப்படி பார்க்கிறேன், நண்பர்களின் வழியாகவா. கஷ்டப்படும் சமயத்திலா , நமது அர்பணிப்பிலா.....?

ஆண்டவரின் பார்வையில் அவரின் அழைப்பிற்கு நான் தயார் நிலையில் இருக்கிறேனா?

குறிப்பு 4.

இயேசு மற்றும் அவர் பணியை அடையாளங்களோடு ஏற்றுக் கொள்கிறேனா?

இயேசு மற்றும் அவர் தம் பணி ....நிகோடமசுக்கு குழப்பமாக இருந்தது. இயேசு மெசியாவா? அப்படி என்றால் பரிசேயர்கள் இயேசுவை ஏன் தொல்லை கொடுப்பவராக பார்க்கின்றனர்? ஆண்டவரின் திருமகன் இயேசு மற்றும் அவர் தம் பணியுடன் அடையாளங்களைக் காட்டி நிருபிக்கிறார். இருப்பினும் ஏன் அவரை நிராகரிக்கின்றனர்? உயர்ந்த நிலையில் அண்டவரின் திட்டங்களை காண நிகோடமசை அழக்கிறார். ஆண்டவரால் இயேசு அனுப்பட்டார் என ,மனந்திறந்து நிகோடமசு ஏற்று கொள்ள வேண்டும். இயேசு மேற்கொண்ட பணி ஆண்டவரால் நியமிக்கப்பட்டது. உன்னுடைய குழப்பங்கள் மனிதர்களிடம் இருந்து வந்ததா அல்லது ஆண்டவரின் திட்டமா என இயேசு நிகோடமசை நோக்கிக்கேட்டார்.

கேள்விகள்

எனக்கு இயேசு திருமகன் யார்?

எந்த நோக்கத்திற்காக இயேசு பணி செய்கிறார்?

எப்படி என்னை ஊக்குவிக்கிறது.....தற்புழ்ச்சியா அல்லது மகிமையெல்லாம் ஆண்டவருக்காகவா?

சகோதர சகோதரிகளே இந்த தவக்கால 4 வது வாரம் ஆனது , இயேசுவின் புதிய நோக்கத்தோடு ஒரே வழி வாழ்க்கை மற்றும் உண்மை எனும் பார்வையை ஒன்றிணைந்து காண்போம்.. அண்டவர் ஆசீர்வதிப்பாதாக! ஆமென் !